# சுவாமிவிபுலாநந்தர்நினைவுவிழா பற்றிய ஒருபார்வை.

**அஜந்தா ஞானமுத்து**
(சுவாமி விபுலாநந்தர்கலைமன்ற ஸ்தாபகர்களில் ஒருவரும்
மன்றத்தின் முன்னாள் செயலாளரும்)

2002ஆண்டு கனடாவில்ஆரம்பிக்கப்பட்ட சுவாமிவிபுலாநந்தர் கலைமன்றம் தொடர்ச்சியாக சுவாமிவிபுலாநந்தருக்கான நினைவுவிழாவினை தவறாது ரொரன்ரோவில் நடத்திவருவது மன்றத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். சுவாமிவிபுலாநந்தர் கலைமன்றம் முதன்முதலாக சுவாமிகளின் நினைவுவிழாவினை 2003ம்ஆண்டு ஜுலை19ந்திகயன்று சேர் ஜோன் மக்டொனால்ட் கலையரங்கில் மிகவிமர்சையாக கொண்டாடியது. புலம்பெயர்ந்து கனடாவில்வாழும் கிழக்கிலங்கையைச் சார்ந்தமக்களால் சுவாமிகளுக்கு எடுக்கப்பட்ட ஒருபெரியவிழா இதுவாகும். வீரமணிஐயரால் எழுதப்பட்ட சுவாமிகளின் சரிதப்பாடலுக்கு நாட்டிய நடனம் மற்றும் சுவாமிகளின்பாடலுக்கான பரதநாட்டிய நிகழ்வுகளும் சிறப்பாக கனடாவாழ் தமிழ்மாணவர்களால் வயதடிப்படையில் நான்குபிரிவுகளாக நடத்தப்பட்ட பேச்சுப்போட்டிகளுடன் இங்குவாழும் அறிஞர்களின் சுவாமிகள் பற்றிய கருத்தாடல்களுடன் விபுலம் என்னும் கனமானமலரையும் வெளியிட்டு விழாவினை ஒருவெற்றிவிழாவாக கொண்டாடியது.




(2003ம்ஆண்டு ஜுலை19ந்திகயன்று முதல் விழாவின்போது பிரதமவிருந்தினராக இலங்கையிலிருந்து வந்திருந்த கல்விமான் திரு க.தியாகராஜா அவர்களையும் அவரது பாரியாரையும் தலைவா கலாநிதி இ.பாலசுந்தரமும் அவர்கள் வரவேற்பதையும் திரு.தியாகராஜா அவர்கள் சுவாமிகளின் படத்திற்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு மாலைத்தட்டுடன் மன்றச்செயலாளர் அஜந்தா ஞானமுத்து)

முதல்விழாவினைப்பின்பற்றி இம்மன்றம் அதேமாதிரியான நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக கடந்த ஐந்துவருடமாக சுவாமியின்நினைவுவிழாவினை நடத்தி வருவது ஒருசிறப்பம்சமாகும். நடைபெறும் விழாவில் சுவாமிகள் பற்றியபாடலுக்கு நாட்டியமாடும் மாணவிகள் வேறுபட்டிருந்த போதும் அவர்களது அபிநயமும்

அந்தப்பாடலுக்கான பாவமும் பார்வையும் பார்ப்பவரதுமனதை பரவசப்படுத்தி வருவது குறிப்பிடவேண்டியதொன்றாகும். பேச்சுப்போட்டிகளில் பங்குபற்றி அதில் வெற்றிபெற்ற ரொரன்ரோ பகுதியில்வாழும் தமிழ்மாணவர்களால் சுவாமிகளின் சரிதத்தை மேடையில் வருடாவருடம் மக்கள்முன் பொறிபறக்க மழலைத்தமிழில் பேசும்திறனால் ஒவ்வொரு அரங்கையும் மெய்சிலிர்க்கவைக்கின்றன. வழமை போல வெற்றியீட்டிய மாணவர்களின் மேடைப்பேச்சு வித்தியாசமான பார்வையில் புதியவர்களிடமிருந்து கேட்கும்போது ஆண்டுதோறும் சுவாமிவிபுலாநந்தர் கலை மன்றமானது கனடாவில் புதிதாக ஒவ்வொரு தலைமுறையினரையும் வழிப்படுத்தி தமிழோடு கலாசரம் கலந்து அதனைவழப்படுத்தி சுவாமிகளின் புகழ்பரப்புகின்றது என்றால் அதுமிகையாகாது.

அந்தவகையில் இவ்வருடம் நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள்
<u>பாலர்பிரிவில்</u>:- சுபவீன் பவானந்தன்,சுரபி யோகநாதன், திவ்யா பிரபாகரன், ஓவியா சுபாஸ்சந்திபோஸ், சுபானி யோகநாதன்
<u>கீழப்பிரிவில்</u>:- கரிசாந்தன் பத்மநாதன், சங்கவை விமலநாதன், தக்ஷேந்தன் நாதன் <u>நடுப்பிரிவல்</u>:- கிருத்திகா நாதன், ரிஷபன் குமரகுரு அபிகாசினி ஏரம்பமூர்த்தி, <u>மேற்பிரிவில்</u>:- நிவேதிகா ஏரம்பமூர்த்தி, வீணா செல்வகுமார் ஆகியோரை நாம் மனநிறைந்து பாராட்டுகின்றோம்.

மேலும் ஒவ்வொரு விழாவின்போதும் சுவாமிவிபுலாநந்தர் கலைமன்றம் தகுதியான சிறந்த பிரதமவிருந்தினர்களை தெரிவுசெய்வதில் குறியாகவுள்ளது. அந்தவகையில் முதலாவது விழாவிற்கு மட்டக்களப்பில் சுவாமிகளின் பணிகளில் பங்களிபபாற்றியவரும் முன்னாள் மட்டக்களப்பு மேயரும், ஆளுனரின் செயலாளரும், சிறந்த கல்விமானுமாகிய மறைந்த க.தியாகராஜா அவர்கள் பிரதமஅதிதியாக தாயகத்திலிருந்து அழைக்கப்பட்டிருந்தார். இவ்வருடமும் கடந்த செப்ரம்பர் 8ந்திகதியன்று மிஸசாகாவிலுள்ள போட்கிறடிற் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற ஐந்தாவதுவிழாவிற்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் சிறந்த கல்வியாளரும் தற்போது கனடா குருமகாராஜி ஞான அறிவு ஆன்மீகசபைப் பொறுப்பாளருமான திருமதி. சாரதாதேவி பேராயிரவர் அம்மையார் அவர்கள் கலந்து விழாவினைச் சிறப்பித்தார்.



(இவ்வருடம் நடைபெற்றவிழாவில் பங்குபற்றிய பிரதமஅதிதி பேட்டியில் வெற்றி பெற்ற சிறுவனுக்கான வெற்றிக்கிண்ணத்தை வழங்குகின்றார்.)

விழாவில் அமைக்கப்பட்டிருந்த பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்த அரங்கிலிருந்து திருமதி. சாரதாதேவி பேராயிரவர் அம்மையார் அவர்கள் ஆற்றிய தனது உரையில் மக்களின்மனதில் “ஏதோவொன்றை” ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. தனதுரையை இவ்விழா யாருக்கு எதற்காக எடுக்கப்படுகின்றது என்னும் கேள்வியுடன் மிகநிதானமாக ஆரம்பித்த அவர் மெய்ஞான வாழ்க்கையின் ஆதாராமாக சுவாமிகளின் வாழ்க்கையை குறிப்பிட்டு அவர்பெற்ற மெய்ஞானம் பற்றிய ஆராய்ச்சியில் நம்மாணவர்கள் ஈடுபடவேண்டும் எனவும்கேட்டுக்கொண்டார். அவரதுபேச்சு மெய்யுணர்வைக்காணும் வழிகளுக்கான சிவபுராணத்தை தொட்டுச்சென்று விடைபெற்றது. ஆனால் அவர் “ஏதோஒன்றை” அங்கிருந்த மக்கள் மனதில் விட்டுச்சென்றதை உணரக்கூடியதாக இருந்தது.

சுவாமிகள் முதற்தமிழ்பேராசியராக பணியாற்றிய தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம்பெற்று அரங்கேற்றம் கண்டு தற்போது கனடாவில் பரதநாட்டிய ஆசிரியர்களாகவிருக்கும் மூன்று பரதகலைமாமணிகளின் நாட்டியம் அவர்களது அசைவிற்கும் முகபாவத்திற்குமேற்ப பார்வையாளர்கள் தங்களையும் பாவனைசெய்து ரசித்ததையும் அவர்களை பரவசப்படுத்தியதையும் காணக்கூடியதாக இருந்தது. சிறந்த பரதக்கலையயை சிறப்பாக ஆடிய அம்மூவரும் கனடாதமிழருக்கு கிடைத்த முத்தான மூன்று பரதமணிகள்தான்.

“கண்டேன் சுவாமியை” என்னும் கருத்துப்பரிமாற்ற உரையாடலில் எல்லாமதங்களையும் சேர்த்து சுவாமிகள் மதங்களைக் கடந்தவர் என்னும் கருத்தினையுணர்த்திய சிறுவர்களின் பேச்சும் நடிப்பும் சபாஸ். சிவதாண்டவம் வழங்கிய மூன்றுகன்னியரும் சிறப்புற ஆடி வந்தவர் மனதை பக்திபரவசத்தில்

ஆழ்த்தினர். வீணை இசையின் மூலம் அரங்கிலிருந்தோரை கண்ணை மூடியபடி அதன் அடிநாதத்தினை யாவரும் கேட்கத்தூண்டிய நால்வருக்கும் பாராட்டுக்கள்.

வழமையாக கனடாவில் நடைபெறும் விழாவின்போது அதனை ஆரம்பிப்பதற்கான தாமத்திற்காக பேசப்படும் காலநிலை போக்கு வரத்துநெரிசல் பாதைத்தடை போன்ற சாக்குப்போக்குகளால் சிலமணித்துளிகள் விழா தாமதித்தாலும் வழமையான நமதுபண்பாட்டு வழக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு ஒட்டுமொத்தமாக மிகச்சிறப்பாக நிகழ்வுகள் நடைபெற்றது. தற்போதய சுவாமி விபுலாநந்தர் கலைமன்ற நிர்வாகஉறுப்பினாகள் யாவரும்தங்கள் பொறுப்புக்களை திறம்படச் செய்துள்ளார்கள் என்பதனை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. குறிப்பாக தான் நோயுற்றிருக்கும் வேளையிலும் மன்றத்தின் செயற்பாடுகளுக்கு ஊக்கம்கொடுத்து அதனைத்தலைமைதாங்கிச் செல்லும் அண்ணன் மாசிலாமணி நல்லரெத்தினத்திற்கும் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிய கன்னி அறிவிப்பாளர் பாபு வசந்தகுமாரும் சிறப்பாக பாராட்டப்படவேண்டியவர்கள்.

மதங்களை கடந்து சமூகமுன்னேற்றத்தின்பால் தீராதகாதல் கொண்டு பாமர மக்களுக்காக இனமத வேறுபாடின்றி பலரின் அறிவுக்கண்ணைத் திறந்த ஒருமாமனிதன் சுவாமிகள் ஆவார். பாரதியாரின் பாடல்களை தமிழுலகம் அறியாத இருந்தவேளைகளில் அதில் தன்மனதைபறிகொடுத்த தமிழ்பக்தனான சுவாமிகள் பாரதிபாடல்களையும் அவற்றில் வெளிப்படும் தமிழுணர்வையும் அதனால் தமிழ்னாகப்பிறந்த ஒவ்வொருத்தரும் அதனை அறிந்திருக்கவேண்டிய அவசியத்தையும் தமிழுலகிற்கு வெளிபடுத்தி பாரதியார் புகழ்பரப்பியவர். அதன் பலனாகத்தான் பின்னாளில் பாரதிதாசனும் பலதமிழ்க்கவிகளும் தமிழுலகில் உருவானார்கள். பாரதியனதும் பாரதிதாசனதும் தாக்கம் இல்லாத எந்த தமிழ்கவிஞனையும் புலவனையும் நம்தமிழுலகில் இன்றுகாணமுடியாது. அதற்கு காரணமாயிருந்த சுவாமி விபுலாநந்தரை நாம் என்றும் மனதிற் கொள்ளுதல் வேண்டும்.

பலமொழிகளில் பாண்டித்தியம் பெற்ற சுவாமிகள் அம்மொழிபேசும் மக்களின் கலாச்சார விழுமியங்கள் எவ்வாறு வெளிகாட்டப்பட்டு அதனை உலகம் ஏற்கின்றது என்பதை உணர்ந்து தமிழ்பண்பாடு கலாசாரத்தையும் வெளிக் கொணரும் நோக்கோடு தமிழ் நாட்டிலிருந்த பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழிக்கான தனியானதுறை ஒன்று அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை உணரவைத்து தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் முதல்முதலாக பல்கலைக் கழகத்தில் தமிழத்துறைப்பீடத்தை அமைக்க உந்துசக்தியாக இருந்தது மட்டுமன்றி இருநாட்டிலும் அமைக்கப்பட்ட தமிழ்பீடத்துறையின் முதல் தலைவராகவும் பணியாற்றியவர். அதன்மூலம் இன்று தமிமர்கலாசரம் உலகமக்களால் போற்றப்படுமளவிற்கு காரணமாகவிருந்த தமிழின் தந்தையாக சுவாமிகள் போற்றப்படுகின்றார். அவர் இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழினையும் ஐயம் திரிபறகற்றுத்தெழிந்து அதனை தமிழுலகத்திற்கு வெளிக்கொணர்ந்ததால்தான் முத்தமிழின் வித்தகர் தமிழ்முனிவர் என்றெல்லாம் அன்றுவாழ்ந்த தமிழறிஞர்களால் போற்றப்பட்டார். இன்றுவரைக்கும் தமிழுகத்தில் விபுலாநந்தருக்கு ஈடுஇணையாக தமிழ் அறிவும் மெய்ஞானஅறிவும் கொண்டவர் எவரும் பிறக்கவில்லை.



(பிரதம விருந்தினருடன் விபுலாநந்தா கலைமன்றத்தின் நிர்வாக உறுப்பினர்கள்)

புலம்பெயர்ந்து கனடாவில்வாழும் கிழக்கிலங்கைமக்களால் மட்டுமன்றி பொதுவாக ஒன்றிணைந்த எல்லாத்தமிழர்களாலும் சுவாமிகளுக்கு வருடந்தோறும் கடந்த ஐந்துஆண்டுகளாக எடுக்கப்பட்டு வரும் இவ்விழாவிற்கு தமிழ்பண்பாடு கலாச்சாரம் பேணப்படவேண்டும் போற்றப்படவேண்டும் அது அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என கனடா மேடைகள்தோறும் கோயில்கள்தோறும் பிரசங்கம் செய்வோரும் சினிமாக் கலைகலாசார நிகழ்வுகளென திரளாகச்செல்வோரும் இவ்விழாவில் காணமுடியாது இருப்பது கவலைக்குரிய விடயமாகும். இதைவிட மிக மிகவேதனைக்குரியதும் ஏற்றுக்கொள்ள முடியாததுமான விடயம் சுவாமிகள் பிறந்த கிழக்கிலங்கை மண்ணிலிருந்து கனடாவில் வாழும்மக்களின் பிரசன்னமும் அவர்களின் ஒட்டுமொத்த பங்களிப்பும் இல்லாததே!!!! எதுஎவ்வாறு இருப்பினும் சுவாமி விபுலாநந்தர் கலைமன்றமானது தனது உறுப்பினர்களுடனும் தொடர்ந்து தமிழ் பண்பாட்டில் புதிதாக கலந்துவரும் சிறுவர்களாலும் பரதநாட்டிய கலைஞர்களாலும் சுவாமிகளின் நினைவுவிழா வருடாவருடம் தொடர்ந்து நடைபெறும் என்பதில் உறுதியாகவும் தெளிவாகவும் உள்ளார்கள் என்பதுமட்டும் நிஜம்.